தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்
பாவலரேறு பெருஞ்சித்திரனர்

கிழமை இதழ்

தொகுதி-3 | தி. பி. 2016 விடை 26 (9-6-1985) 65 காசுகள் இதழ் எண் : 58 | பகுதி 18 20

இந்தியா என்ருல், இங்கு இருப்பவர்கள் இந்தி பேசும் வடநாட்டவரும், ஆரியத் தமிழ் பேசும் பார்ப்பனருந்தாமா?

வேறு இனத்தவரே இங்கு இல்லையா ?

தொலைக்காட்சியில் தில்லுமுல்லுக் கருத்துப் பரப்புதல்கள் !

தேசியம் என்ருலே இந்தியும் வடநாட்டுக்காரனுந்தாமா?

தொலைக்காட்சி நிலையத்தில் மானமுள்ள தமிழர் ஒருவருமில்லையா ?

போராடிச் சாவதுதானே!

தொலைக்காட்சித் துறையின் அழிம்புகளும் கொடுமைகளும் !

வர வர, தொலைக்காட்சித் துறையினரின் அழிம்புகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆர்ப்பாட் டங்களுக்கும் ஓர் அளவே இல்லாமல் போய்விட்டது. தேசிய நிகழ்ச்சிகள் என்னும் பெயரால், இந்தி கொடி கட்டிப்பறக்கிறது. தேசியத்தின் பெயரால், வடநாட்டினரின இந்துப் பண்பாட்டுக்கே இலை விரிக்கப்படுகிறது: ஒருமைப் பாட்டின் பெயரால், இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனத் தினரையும், இந்தி, இந்து மதம், இவற்றை ஒப் புக்கொள்ளும் இந்திராக் கட்சித் தொண்டர்களாக மாற்றி, ஓரியமைப்படுத்தும் முயற்சியில், நடுவ ணரசின் செய்தித்துறை படுவேகமாகவும், வஞ்சக மாகவும், சூழ்ச்சியாகவும் செயல்பட்டு வருகிறது. எந்தவகையான மக்கள் எதிர்ப்பையும் அவர்கள் காதில் போட்டுக் கொள்வதே இல்லை. தொலைக் காட்சித் துறையை இதற்காகவே அவர்கள் வளர்த் தெடுக்கிருர்கள்.

இந்தியா என்ருல், இங்கு இருப்பவர்கள் இந்தி பேசும வட நாட்டு மக்களே, அல்லது ஆரியத்தமிழ் பேசும் பார்ப்பனர்களே, என்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அவர்கள் அடித்துக் கூறிக்கொண்டு வருகிருர்கள். வேறு இனத்தவர்களே இங்கு வாழ வில்லை என்று பொருள்படும்படி காட்சிகளையும் கருத்துகளையும் அமைத்துத் தொலைக் காட்சிக் கருவியை அவர்கள் பயன்படுத்தி வருகிருர்கள்.

தமிழ் நாட்டுத் தொலைக்காட்சி நேரத்தில், 2 மணி நேரத்தையே தமிழுக்கு ஒதுக்குகிருர்கள், அதிலும் அந்த நேரத்தில் அருவருப்பும், இழிவும் நிறைந்த காட்சிகளைக் கொண்ட - ஆட்டமும் கூத் தும் மிகுந்த - திரைப்படப் பாடல்களையும் மிகப் பழைய அல்லது பயனற்ற புதிய திரைப்படங் களையுமே அவர்கள் தொலைக்காட்சியில் ஒளியரப்பு கிருர்கள். அவற்றிலும் மத மூட நம்பிக்கைகளுமே, அல்லது கீழ்த்தர உணர்வுகளே நிரம்பியிருக்கின்றன. இந்தி மொழிக் காட்சிகள், கருத்து நிறைந்த அர சியல், அறிவியல் செய்திகள் அடங்கிய தொகுப்புக ளாகத் தரப்படுகின்றன. இவற்ருல், மக்கள் மனங் களில், தமிழில் மூட நம்பிக்கைகளும், அருவருப்பு களும் தவிர வேறென்றுமில்லை என்னும் எண் ணத்தை மறைமுகமாக, சூழ்ச்சியாக விதைக்கிருர் கள். இந்தி நிகழ்ச்சிகளுக்கு மட்டும் 4-30 மணி நேரத்தை ஒதுக்கிக் கொள்கிருர்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில், காலை 8-30 மணியில் இருந்து நாள் முழுவதும் காட்டப்படும் 15, 16 மணி நேர நிகழ்ச்சிகளில் தமிழில் ஒன்றுக்கும் உத வாத நிகழ்ச்சிக்கும், வரட்டுத்தனமான திரைப் படத்துக்கும் 3 மணி நேரம், ஆங்கிலத்துக்கு 1 மணி நேரம், இந்திக்கு மட்டும், 11 அல்லது 12 மணி நேரம். இந்தி மொழியையும், தேசியத்தையும் வளர்க்க, தமிழ்நாட்டு வரிப்பணம் கொள்ளை போகிறது தேசியம் என்ருல் இந்தி மொழியும், வடநாட்டுக்காரனின் கதைகளும், நாடகங்களும் காட்சிகளுந்தாமா? உழவனைக் காட்டிஞல் இந்திக் காரன்; வாணிகனைக் காட்டிஞல் வடநாட்டுக் காரன்; கலைகளைக் காட்டிஞலும் அவன்கள்தாம் ! வயிற்றெரிச்சல்! வயிற்றெரிச்சல்! தப்பித் தவறித் தமிழ் நாட்டைப்பற்றி ஒரு செய்தியோ, கலி யாணமோ, கருமமோ இருந்தால் அவற்றில் பார்ப்பான்! அவன் குடும்பம்! இஃதென்ன குடியரசு நாடா ? அல்லது இந்திக்காரனின் கும்மாளக் கூத்தாட்ட மேடையா ? தொலைக்காட்சி நிலை யத்தில் மானமுள்ள தமிழர் ஒருவருமே இல் லையா ? எல்லாருமா பார்ப்பானுக்கும் வடநாட்டுக் காரனுக்கும் பிறந்தவர்களாகப் போய் விட்டனர்?

மதம் என்ருல் இந்து மதம்தாஞ ? மதத் தலை வன் என்ருல் காஞ்சி காமகோடி ஊசைப் பார்ப் பான் தாஞ? உலா வரும் ஒளிக்கதிர் 'நிகழ்ச்சிகளில் ஏதோ, ஒரு முசுலீம் நிகழ்ச்சியையோ, ஒரு கிருத்தவ நிகழ்ச்சியையோ மருந்துக்குக் காட்டி விட்டு, மீதி அத்தனையும் இந்து மத நிகழ்ச்சிகளுக்கே பட்டயம் எழுதிக்கொடுக்கப்பட்டு விட்ட தா? இந்து மதத்தில் தாஞ தெய்வடிகிறது? மீதி மதங்களில் என்ன சீழா வடிகிறது ?

சாதி வெறியர்களும், மத வெறியர்களும், தேசி யம், ஒருமைப்பாடு பேசும் திருடர்களும், கொள்ளை கொலைகாரர்களும் ஆட்சியில் உள்ளவரை, நிலைமை இதுதான்; இப்படித்தான் இருக்க முடியும் ! மானமுள்ள ஒரு தமிழஞவது இதுபற்றிப் பேச முன் வருகின்ருஞ? அனைவருமா இளித்த வாயர்களாக, பணத்துக்கு வீங்கிகளாகப் போய்விட்டனர்? காந்தி குடும்பத்துக்கே நாடு அடகுவைக்கப்பட்டுவிட்டதா? இங்குள்ளவர்கள் அடிமையாகி விட்டார்களா ! கேட்பதற்கே யாருமில்லையா ? இந் நிலையில் செய லுக்கு எங்கே வரப்போகிருர்கள் ?

இனி, வரலாற்றுச் சான்றுகளோ, அறப்பேச்சு களோ, இணக்க முயற்சிகளோ, இந்த நாட்டில் எடுபடப் போவதில்லை. இன்னும் பத்து ஆண்டு களில் எல்லாவற்றையுமே அழித்து விடுவார்கள். இன்று அரசியலைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் எத்தர்கள். தமிழினத்துக் கென்ருே, பஞ்சாபியர்க ளுக்கென்ருே அசாமியர்க்கென்ருே, மிசோக்களுக் கென்ருே, நாகாக்களுக் கென்ருே, வேறு எந்தத் தேசிய இனத்துக் கென்ருே, இனிமேல், எந்த மொழியோ, கலையோ, பண்பாடோ, அல்லது அவ் வினங்களின் தனித்தனியான எந்த நாகரிகப் பண் பாட்டுக் கூறுகளோ எதையுமே விட்டுவைக்கப் போவதில்லை என்றும், அழித்துவிடுவதென்றும், அர சியல் பணியாப் பார்ப்பன முதலைகள் திட்டங்கள் தீட்டிக்கொண்டன. அத் திட்டங்களின் படிதான்: தொலைக்காட்சி வாஞெலி, செய்தித்தாள்கள் என் னும் வலிவுமிக்க அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தி மக்களை மூளைச்சலவை செய்து வருகிருர்கள்; அதி காரத்தில் உள்ள வன்முறையாளர்கள் !

இனி, என்ன செய்யப் போகிருேம் நாம்! மதி கெட்டு, மானமற்றுத் தறிகெட்டுத் திசைகெட்டுத் தன்மானமும், தன்மதிப்பும் கெட்டு, நாமும் தேசி யத்திற்குப் பாட்டுப் பாட வேண்டியது தாஞ? இல்லை, தேசிய இனப் போராட்ட எழுச்சியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் போகிருேமே ? எது செய்யப் போகிருேம் ! எண்ணிப் பாருங்கள் !

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம்!

12-5-1985 - இல் ஈரோட்டில் கூடிய கூட்டத்தின் நிகழ்ச்சிச் சுருக்கம்! (தொடர்ச்சி-2)

அதன் பின், செயற்குழுக் கூட்டத்திற்கு வந்திருந்தவர் அனைவரும் தன்னிலை விளக்கம் கூறினார்கள். அவ்வாறு தன்னிலை விளக்கங்கள் கூறப்பெறுகையில், சிலர் தங்களுக்குள்ள நீண்ட நெடுங்காலத் தென்மொழி ஈடுபாட்டையும், தென்மொழிக் கொள்கைக்காகத் தாங்கள் உழைத்ததையும், அதன்வழிப் பல்வேறு அன்பர்களைத் தாங்கள் உருவாக்கியதையும், சிலர் முன்னர் தென்மொழி நடத்திய விடுதலைப் போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றதையும், பிற துன்பந் துயரங்களையும், தாங்கள் எப்படியெல்லாம் தென்மொழியால் வளர்த்தெடுக்கப் பெற்றுள்ளோம் என்பதையும், மனக்கிளர்ச்சியொடும், நெகிழ்ச்சியொடும், வீறுணர்வோடும், சிலர் உணர்வு வயப்பட்ட அழுகையுடனும், ஏறத்தாழ ஒரு மணி நேரம் எடுத்துரைத்தனர். அவர்களின் உரையால் கூட்டம் கிளர்ச்சியும் மலர்ச்சியும் பெற்றது

அதன்பின்னர், முன்னிரவு நடந்த, மேனிலைக்குழுவின் கலந்துரையாடலில் பேசப்பெற்ற கருத்துகளைக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திரு. தென்னவன்கோ அவர்களும், புதுவை மாநில அமைப்பாளரும், சொல்லாய்வறிஞருமான திரு. ப. அருளி அவர்களும், வந்திருந்த செயற்குழு அன்பர்களுக்கும், பார்வையாளர்களுக்கும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்தார்கள். அருளி அவர்கள் உரையாற்றுகையில், நம பட்டறிவின்படி, நாம் திரும்பத் திரும்பப் போராட்டங்களைச் செய்வதினால் பயனில்லை என்றும், இக்காலக் கட்டத்தில் 50,000 படிகள் தமிழ் நிலம் இதழை அச்சிட்டுத் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவும்படி செய்திட வேண்டும் என்றும், கருத்துப் பரப்புதலே தலையாய வேலையாக இருக்க வேண்டும் என்றும், அக்கால் நாம் செய்யவிருக்கும் போராட்டத்தை மக்களாகவே எடுத்துச் செய்வார்கள் என்பதில் ஐயமில்லை என்றும் கூறினார்கள். அவருரைக்குப்பின், தலைமைக் கழக முதன்மைக்குழு உறுப்பினர் திரு தென்மொழி முத்துக்குமரனார் அவர்கள் கருத்துக் கூறுகையில் தமிழீழச் சிக்கல் தீவிரமாக உள்ள இந்நாளில், தமிழகச் சிக்கலை எடுப்பது சரியானதா என்று முதல்வரவர்கள் விளக்க வேண்டுமென்றும், எனவே, நம் போராட்டங்களைச் சிலகாலம் தள்ளிவைக்கலாம் என்றும்கேட்டுக்கொள்வதாகவும், எப்படியிருப்பினும், முதல்வரவர்கள் இடும் எந்தக் கட்டளையையும் தாம் செயல்படுத்த அணியமாக இருப்பதாகவும், கூறினார்கள்.

அடுத்து, சிறப்பு அழைப்பாளர்களில், பண்டாரகர், புலவர். மு. தெய்வநாயகம் ('திராவிட சமயம்' ஆசிரியர், சென்னை) அவர்கள் கருத்துரைக்க அழைக்கப்பெற்றார்கள். அவர்கள் உரையாற்றுகையில், அழுத்தம் திருத்தமாகப் பல இனநலக் கருத்துகளைக் கூறினார்கள். அவர்கள், 'தமிழகத்தின் விடுதலைக்குரிய காலம் கனிந்துவிட்டது; ஆனால், நாம் முதலில் புற விடுதலைக்குப் பின், அக விடுதலை பெறவேண்டும். சாதிகளிலிருந்தும், இந்து சமயத்தினின்றும நாம் விடுதலை பெற்றாக வேண்டும். உலகில் இன்றுள்ள சமயங்களெல்லாவற்றுக்கும் நம் திராவிட சமயமே மூலமாகக் கருத்து வழங்கியுள்ளது. மார்க்சு உள்பட அனைவரும் திராவிடரே. நமக்கொரு சமயம் தேவையெனில், திராவிட சமயமாக உருவாக்கவேண்டும். சரியான அடிப்படைகளை அமைத்துக்கொண்டு, நம் போராட்டினால் நமக்கு வெற்றியே' என்று கூறினார்கள்.

அடுத்து, தமிழக விடுதலைக் கூட்டணி உறுப்பாண்மைத்தலைவரும், விடுதலை வீரரும் ஆகிய புலவர் கலியபெருமாள் அவர்கள் பேசினார். அவர்கள் பேசுகையில், வேறு வேறு அமைப்புகளாக நாம் இருந்தாலும் தமிழக விடுதலைக்கென நாம் அனைவரும் ஓரணியில் நின்று நாம் போராட முனைதல் வேண்டும். இக்கால், நாம் பலவகையான அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கிறோம். இன விடுதலைப் போராட்டத்திற்கு முன் வந்துள்ள நான் இன்னும் சிறையில் இருந்து முழுமையாக விடுதலை பெற்றுவிடவில்லை. இப்பொழுது ஆட்சியிலிருப்பவர்கள் இன விடுதலைக்கு நண்பர்கள் அல்லர்; பகைவர்களே! உண்மையான பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்டவர்களும் தேசிய இன விடுதலைக்கு எதிரானவர்களாக இருக்க முடியாது. பொதுவுடைமைத் தந்தை காரல் மார்க்சு அயர்லாந்து இன விடுதலையை ஆதரித்தவர். ஆனால் இடது பொதுவுடைமையைச் சேர்ந்த ஈ. எம். எசு. நம்பூதிரிபாது தனி நாடு கூடாதென அறிக்கை விடுகிறார். இவர்களெல்லாம் மார்க்சியக் கொள்கையைப் பின்பற்றுகிறார்கள் என்று சொல்லமுடியுமா?

இலெனின், தேசிய இனங்கள் சம உரிமை பெறுவதற்கு எதிரானவர்கள் பொதுவுடைமைக் கொள்கைக்கே எதிரானவர்கள் என்றார். முற்றாளுமையின் எடுபிடிகள் (ஏஜெண்டுகள்) எங்களைப் பார்த்து, நாங்கள்தாம் அமெரிக்கக்கைக்கூலிகள் என்கிறார்கள்.

புரட்சியாளர்கள் அயலார் பிடியினின்று முதலில் தங்களை விடுவித்துக் கொள்ளுதல் வேண்டும். முதலில் வரலாறு தெரியவேண்டும். இந்தியா ஒரு நாடா? பல தேசிய இனங்களைக் கொண்ட ஓர் அரசு. உண்மையான மார்க்சியக் கொள்கையைக் கடைப் பிடிப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள், அயலாரை விரட்டிவிட்டுத் தேசிய இனங்களை அவர்களின் பிடியிலிருந்து விடுவிக்க முற்படுதல்வேண்டும். எனவே, அவர்கள் இந்திய தேசிய இனங்களின் விடுதலைக்குப் பாடுபடுதல் வேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களின் விடுதலையும் நமக்கு முகாமையே. எல்லாருக்கும் இறப்பு என்பது வரக்கூடியதுதான். ஆனால், அது மக்கள் நலனுக்காகவென்று இருக்கவேண்டும் என்று மாவோ கூறினார். ஒவ்வோரணியும் விடுதலைக்குத் தனித் தனியாகப் பாடுபடுவது அவ்வளவு பயன் தராது என்று கருதியே விடுதலைக் கூட்டணி அமைத்துள்ளோம். வெடிகுண்டைக் கையில் எடுத்தே ஆகவேண்டும். எப்போது எடுப்பது? யார் எடுப்பது? என்பவையே தீர்மானிக்கப்படுதல் வேண்டும். பெரும் பகுதி மக்கள் இதில் பங்குபெற்றாக வேண்டும்.

ஆங்கிலேயர்களின் கைக்கூலிகளாக இருந்தவர்கள் டாட்டா, பிர்லா போன்றவர்களே. எனவேதான் அத்தகைய கூட்டங்களின் கைகளில் வெள்ளைக்காரன் நாட்டைத் தந்துவிட்டுப் போனான். இந்த நாட்டின் மொத்த பொருளியலில், தனியாரின் மூலமுதலீடு 45 விழுக்காடு. டாட்டா, பிர்லா போன்றவர்களின் முதலீடு 30 விழுக்காடு. பிறருடைய முதலீடு 25 விழுக்காடு. இந்தியாவில் 'இந்து' என்று ஒரே தேசிய இனந்தான் உள்ளதென்று தில்லியரசு பொய்யான கருத்தை மக்களிடையே பரப்பி வருகிறது.

இங்குள்ள தமிழின நலம் நாடும் கட்சிகள் ஒன்றிணைந்து, தமிழ்த் தேசிய இன விடுதலைக்குக் குரல் கொடுக்கவேண்டும். விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும். அவ்வாறு செய்தால் அரசு அடக்குமுறைகளைக் கையாளும்; பின் படைத்துறைவரும். வந்தால் என்ன? நாம் போராடியும் பெறுவதைப் பெற்றுத்தானே ஆகவேண்டும்.

தி.மு.க.-வும், அ.தி.மு.க.-வும் தமிழ்த் தேசிய இனப் போராட்டத்திலிருந்து தங்களை வெளியேற்றிக் கொண்டன. எனவே, அவைபற்றி நாம் கவலைப் படத் தேவையில்லை.

இந்தியாவிலேயே தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு என்று முதலில் குரல் கொடுப்பது, தமிழ் நாடுதான்! தில்லியை எதிர்த்து இங்கு நாம் மட்டுந்தாம் குரல் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். நம்மோடு போராடுவதற்கோ, அல்லது இந்தத் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கோ, இங்குள்ள வேறு கட்சிகளில் எதுவும் நம்முடன் வரவில்லை; வரும் என்றும் நம்பமுடியாது ஆனால், வேறு மாநிலங்களில் உள்ள வேறு சில தேசிய இனங்களும் நமக்கு ஆதரவாக இருக்கும் என்று தெரியவந்துள்ளது. இந்த நிலையில் நாம் ஒரு போராட்டத்தைத் தொடங்கியாக வேண்டும்' என்பதாகப் பேசி முடித்தார்கள்.

-(தொடரும்)

வாங்கி விட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள் விற்பனைக்கு அணியமாகவுள்ளன.

1.	பாவேந்தர் பாரதிதாசன்	14—00
2.	இனம் ஒன்று படவேண்டும் என்பது எதற்கு?	1—00
3.	வாழ்வியல் முப்பது (மறு பதிப்பு)	1—50
4.	சாதித் தீமைகளும், அதை ஒழிக்கும் திட்டமும்	0—50
5.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	2—25
6.	தன்னுணர்வு	1—50
7.	இலக்கியத் துறையில், தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்	1—50

தொடர்பு கொள்ள:

மே/பா, தென்மொழி, சென்னை-5.

நன்றியறிவிப்பு!

இனநலச் செல்வர், இராமலிங்கனார் வாழ்க!

அண்மையில், (12-5 1985 - இல்) ஈரோட்டில், பூரணா விடுதியில் நடைபெற்ற, உலகத் தமிழின முன்னேற்றக் கழக, மாநிலச் செயற்குழுக் கூட்டத்தைத் தாம் ஒப்புக்கொண்ட வகையில், முழுதும் பொறுப்பேற்று, ஏறத்தாழ மூவாயிரம் உருபா அளவில் செலவழித்து, மிகவும்சிறப்புடன், வந்திருந்த நூறு எண்ணிக்கை அளவிலான மாவட்ட, வட்ட அமைப்பாளர்கள், மாநிலப் பொறுப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், பார்வையாளர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று, மூவேளை விருந்து புரந்தும், இடையிடை இருவேளை குளம்பியும், சிற்றுண்டியும் கொடுத்தும், தங்குதற்கு ஏந்தான இடங்கள் அமைத்தும், நிறைவுற நடத்திக்கொடுத்த பெரியார் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர், இனநலச் செல்வர் திரு. பாவேந்தர் இராமலிங்கனார் அவர்களுக்கும், அவருடன் ஒத்துழைத்த, ஈரோடு நகரக் கிளைச்செயலர் எழிலரசன் முதலியோர்க்கும், மற்றும் இடைநிலையில் உதவிய அன்பர்கள் பலர்க்கும். கழகச் சார்பில் நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— முதல்வர், உ.த.மு.க. தலைமையகம்.

எதிலும் வெற்றிகள் பீறுமடா...

- மருத்துவர் மறையரசன் -

ஆண்ட தமிழினம் அடிமைத் தளையோடே
அடங்கிக் கிடக்கிறோம் நாளுமடா-நாம்
மாண்டு மடியுமுன் மீண்டு மெழுந்து நம்
மறைந்த புகழினை ஆளுமடா!
கூண்டுக் கிளியெனக் கொடுத்த பழத்தினைக்
கொத்தித் தின்றுளம் இழிபவனே-நாம்
வேண்டும் விருப்பொடு வானில் திரிந்திட
விடுதலை கேட்போம் விழியுடனே.
தூண்டு தல்களும் துணையும் இன்மையால்
துவண்டு மயங்கினாய்; புறப்படடா-நம்
நீண்ட தமிழதன் நிறைந்த வழியினை
நிலைக்கச் செயப்புதுப் பிறப்பெடடா!
தோண்டி விழிதனைத் துடிக்க மிதித்துப்பின்
தொடர்ந்து குருதியுங் குடித்தவனைப்-பிடித்து
மீண்டும் செயமுன்னே மீறும் உணர்வொடு
மிடிமை உதறுவாய் முடிகடனே.
வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சிட
வெம்பி அழுவதை நிறுத்திடடா-உன்றன்
சொந்த மண்ணிலே சுருண்டு கிடப்பையோ?
சுழன்று விலங்கினை அறுத்திடடா!
வந்த வேற்றவர் வலிந்து அடக்கிட
வதைக்கத் துடிநிலை மாறுமடா-நாம்
எந்த நிலையிலும் இணைந்து போரிடின்
எதிலும் வெற்றிகள் பீறுமடா!

அண்ணாவும், தம்பியும்!

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"தமிழ்நாடு பிராமணர் சங்கம் தேர்தலில்போட்டியிடுவதில்லை என்று தீர்மானம் போட்டு, அப்படியே யாரையும் அந்தச் சங்கத்தின் சார்பில் நிறுத்தாமல் விட்டு விட்டதாகச் செய்தி வெளியாகியிருந்ததே! பார்த்தீர்களா?"

"பார்த்தேன்"

"தேர்தலில் பிராமணர் சங்கத்தின் சார்பில் நின்றால் யாரும் வாக்களிக்கமாட்டார்கள் என்று தெரிந்து அப்படி ஒரு முடிவு எடுத்திருப்பார்களா? அல்லது..."

"சொல் தம்பி!"

"தேர்தலில் யார் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தாலும், அந்த ஆட்சியாளர்களின் தலையைத் தடவி, தங்கள் இனத்துக்கு வேண்டியதைச் செய்துகொள்ளும் திறமை அவர்களுக்கு இருக்கும் போது, தேர்தலில் ஏன் நின்று பணத்தைச் செலவழித்துத் தோற்க வேண்டும் என்று விட்டு விட்டிருப்பார்களா?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

—தமிழவேள்.

தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி வாழ்க!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனும்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண்: 58 (9-6-1985) பகுதி 18-10

உத்திகள் வேறு; உறுப்பினர் வேறு; நாடகம் புதியது; முடிவு பழையது!

சூழ்நிலைகள் வேறாக இருந்தாலும், அரசியல்காரர்களுக்குச் சூழ்ச்சிகள் எப்பொழுதும் ஒன்றாகவே இருக்கும். இரமேசு பண்டாரி ஏதோ மலையைக் கிள்ளி எலியைப் பிடித்ததுபோல, இராசீவ்-செயவர்த்தனே சந்திப்புக்கு ஏற்பாடு செய்தாராம்! இலங்கைச் சிக்கல் குறித்து எதுவுமே பேசமாட்டேன் என்று செயவர்த்தனா ஏதோ கிடந்ததுபோலவும், இரமேசு பண்டாரி போனவுடன் ஏதோ இணங்கியது போலவும், குடும்ப இணையொடும், கூட்டுக் கொலையாளிகள் துணையொடும், ஏதோ திருமண விருந்துக்கு வருபவர்போல இந்தியா வந்தார், இக்கால இரண்டாம் இட்லர் செயவர்த்தனா. வந்தவுடன் வரவேற்புச் சடங்குகள்; வாழ்த்துகள்; விருந்துகள்; விருந்தைச் சுவைத்துக் கொண்டே பேச்சுகள்! இடையில் இலக்கக் கணக்கான குடிமக்களை இழந்து நிற்கும் வங்காள தேசம் சென்று இறப்புக்கு இரங்கல்கள்! முடிவில் பழைய பல்லவி பாடும் பச்சையான ஏமாற்று அறிக்கை! திட்டமிட்ட அரசியல் நாடகத்தை நன்றாகவே நடித்தனர்,இராசீவும் செயவர்த்தனேவும்! இடையில் கோமாளிக் குடியரசுத் தலைவரின் கோல ஆரவார விருந்தும் சிறப்புறவே நடந்தது!

இயற்கைப் புயலால் கொல்லப்பட்ட வங்காள தேச மக்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது அங்கே! ஆனால், அதே இலக்கக் கணக்கான ஒன்றுமறியாத் தமிழீழ மக்களைச் செயற்கையாகக்கொன்றுகுவித்த கொடியவனிடம் ஏன் என்றுகூடக் கேட்கப் படவில்லை, இங்கே! அக்கொடியனும், வருத்தம் தெரிவித்ததாக ஒரு வரிச் செய்தியும் வரவில்லை. வந்த கொலையாளிகள் முகத்திலும் வெற்றிக்களிப்பு! வரவேற்ற கொலையாளிகள் முகத்திலும் அதே வெற்றிக்களிப்பு! அங்கு, இலக்கக் கணக்கான தமிழீழ மக்களை, இளைஞர்களாகவும், கன்னிப் பெண்களாகவும், குழந்தைகளாகவும் பார்த்துக் கொன்று குவித்துக் கொண்டிருக்கும் கொடியவர்களும், இங்கு அசாமிலும் பஞ்சாபிலும் குசராத்திலும் பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் குடித்துக் கொண்டிருக்கும் கொலை வெறியர்களும், வங்காள தேசத்தில் இயற்கையால் அடித்துச் செல்லப்பட்ட உயிர்களுக்கு இரங்கலும் வருத்தமும் தெரிவிக்கிறார்கள்! நாடகத்தின் உத்திகள் புதியன! உறுப்பினர்கள் புதியவர்கள்! கதை புதியது! முடிவோ பழையது!

முடிவு அறிக்கையாக வெளிவந்தது! 'விரிவான மனந்திறந்த பேச்சு நடந்ததாம்! (நடந்திருக்கலாம்!) அனைத்து வகையான வன்முறைகளும் குறைந்து இல்லாமற் போக வேண்டுமாம்' (ஆமாம் இப்படியே போனால் இறுதியில் ஒரு தமிழன் கூட இல்லாமல்தான் போய்விடுவான் போல் இருக்கிறது!) இறுதியில் இலங்கையில் பதட்ட நிலையைத் தணிக்கவும். (தணிக்கிறார்களாம்; வங்காளப் புயல்போல் இயற்கையாகவா கேடு வந்தது, தணிப்பதற்கு -? (இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வு ஒன்று காணவும்... (... எத்தனை நாளைக்குத்தான் தேடித் தேடிக் காணப் போகிறார்களோ? வெட்கம் வெட்கம்!) ......உகந்த சூழ்நிலையை உருவாக்கவும்...... (இவர்கள் உருவாக்குவதற்குள்ளே தமிழினமே உருக்குலைந்து போகும்...) இந்தியாவும், இலங்கையும் ஒப்புக் கொண்டனவாம்! (எப்படி ஒப்புக் கொண்டன! அதில்தான் இருக்கிறது, தமிழீழத்தின் உயிர்த்துடிப்பே!) ...இனச்சிக்கலுக்குத் தீர்வு இலங்கையின் ஒற்றுமை மற்றும் ஒருமைப் பாட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமாம்! (எப்படியிருக்கிறது, முடிவு?)

ஒற்றுமைக்காகவா செயவர்த்தனா இத்தனை ஆயிரம் தமிழர்களைக் கொன்றான்? ஒருமைப்பாடு என்றால், இலங்கையில் உள்ள குடிமக்கள் எல்லாருமே சிங்களவர் என்ற பாணியிலா? ஒரே இனமாக இருக்கச் செய்வதுதானே ஒருமைப்பாடு இவர்கள் அகராதியில் இராசீவும் இங்கு அதைத்தானே செய்து கொண்டிருக்கிறார்! எனவே, இரண்டு நாட்டுத் தலைவர்களும் தங்களுக்கு வேண்டாதவர்களையெல்லாம் ஒழித்துத் தீர்த்துவிட்டு ஒற்றுமை நோக்கி ஒருமைப்பாடு வேண்டிப் பேசி முடிவுகட்டி விட்டார்களாம்!

தமிழீழ இனமே, எங்கள் தாயினமே! இனி நீ என்ன செய்யப் போகிறாய்? இராசீவ் செயவர்த்தனா இன்றைக்கு மட்டும் இல்லை இனி என்றைக்குக் கூடிப்பேசினாலும், இன்னும் எத்தனைப் பார்த்தசாரதிகளும், இரமேசு பண்டாரிகளும் எத்தனை அதுலத் முதலிகள், விக்ரம சிங்காக்களிடம் பேசிப் பேசித் தீர்த்தாலும், இதே தீர்வுதான்; இதே முடிவுதான்! நீயும் பல்லை இளித்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருக்கத்தான் போகிறாய். கேட்டுக் கேட்டுக் காது புளிக்கத்தான் போகிறது. வேறு என்ன செய்ய

(தொடர்ச்சி 3 ஆம் பத்தி பார்க்க)

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-7

- கழக முதல்வர் -

38 : இனி இயக்கம் தொடங்கியதிலிருந்து இது வரை,இயக்கத்தின் பெயரால்ஒரு சிறு அளவு தொகையையும நாம் தண்டியதில்லை. உறுப்பினர் கட்டணமென்னும் பெயராலோ, மாவட்ட, வட்ட அமைப்பாளர்கள் கட்டணங்கள் என்னும் பெயராலோ ஒரு காசும் பெற்றதில்லை: வேறு இயக்கங்கள் அவ்வப் பொழுது, உறுப்பினர் பெயராலும், பொது நிகழ்ச்சிகள், மாநாடுகள், வழக்குகள், போராட்டங்கள், வகுப்புகள், இயக்க நன்கொடைகள் என்னும் பல்வேறு வகைப் பெயர்களால் பொதுமக்களிடமிருந்தும், இயக்க உறுப்பினர்களிடமிருந்தும், தண்டுகிற சில நேரங்களில் கட்டாயமாகப் பிடுங்குகிற தொகைகளைப் பார்த்தால், இவை இயக்கங்கள் நடத்துவதற்காக இவ்வாறு கொள்ளையடிக்கின்றனவா, அல்லது கொள்ளை யடிப்பதற்காக இயக்கங்கள் நடத்துகின்றனவா என்று ஐயப்பாடுகூட வந்துவிடும்!

39 : அதுவும், தமிழீழச் சிக்கல் வந்தாலும் வந்தது, அதன் பெயரால் ஆளுக்கு ஆள், இயக்கத்துக்கு இயக்கம், ஊருக்கு ஊர், நாடகம், கண்காட்சி நன்கொடை, ஏதிலியர்க்கு உதவி, துணிமணிகள், அடடா என்னென்ன பெயரால், தலைக்குத் தலை அறிக்கைகளையும், நன்கொடைப் பற்றுச் சீட்டுகளையும் அடித்து வைத்துக்கொண்டு, எத்தனைத் தண்டல்கள், கொள்ளையடிப்புகள், அப்பப்பா, சொல்லி முடியாது. இவற்றுள் சில உண்மையான நிலைகள் அல்லது முயற்சிகள் இல்லவே இல்லை, இருக்கவே முடியாது என்றெல்லாம் நாம் சொல்ல முன்வரவில்லை. ஆனாலும் இவற்றின் பலவாறுன உள்முக நிலைகளை நாம் நேரிடையாகவும் அறிவோம்; அன்பர்கள் வழியும் அறிவோம். இவ்வகையில் நம் இயக்கம் அதிகார முழுமையாக அதிகம் ஈடுபடாததற்குக் காரணமே இவ்வகையான பழிக்கு நாம் ஆளாகி விடக்கூடாதே என்னும் அச்சமும் அருவருப்புந்தான்!

40 : இயக்கம் நடைபெறுவதற்கு, அந்தந்த இயக்க நடவடிக்கைக்கு ஏற்ப, குறைவாகவோ, ஏராளமாகவோ தொகைகள் கட்டாயம் தேவைப்படும் என்பது உண்மையே. தொகையில்லாமல் ஒன்றுமே செய்ய இயலாதுதான். அதற்காகப் பொருள்வாய்ப்பு குறைவான இயக்கங்கள் பொருள் தண்டுவது இன்றியமையாததென்று நாம் ஒப்புக்கொள்ள முடியும். ஆனால், பொருள் வாய்ப்பே மிகுதியாகப் பெற்ற இயக்கங்கள், பொருள் தண்டுவதையே தங்களின் தலையாய நடவடிக்கையாகக் கொண்டு செயல்படுகின்றனவே, அதைத்தான் நம்மால் விளக்கிக்கொள்ள, அல்லது விளங்கிக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அவ்வாறு இவை பல்வேறு தேவைகளுக்காக என்று தண்டப்படும் தொகைகளுக்கான, கணக்குகள் பொது மக்களுக்குக் காட்டப்படுவதே இல்லை.

41 : மேலும், இவை தொகை தண்டப்பெறும் முறையும் மிக வியப்பாகவும் - வேடிக்கையாகவும் இருப்பதை அன்பர்கள் கூர்ந்து கவனித்தால் விளங்கும். சந்தைக் கடைகளின் சந்தடிகளுக் கிடையில் நடைபெறும் பேர வாணிகத்தைப்போல், இவை அனைவரின் கண்களுக்கும் எளிதாகக் கவனத்துக்குப் படுவதில்லையே தவிர, இதில் கருத்துச் செலுத்துபவர்களுக்கு அவை விளங்காமல் போகா.

42 : இத்தகைய இயக்கங்கள் பொருள் தண்டப்படுவதற்குப் பெரும்பாலும் பற்றுமுறிகள் அடிக்கப்படுவதில்லை. அவ்வாறு பற்றுமுறிகள் ஒரு சில நேரங்களில் அடிக்கப்பெற்றாலும், அவற்றுக்கு எண்கள் இருப்பதில்லை அவ்வாறு எண்கள் இருந்தாலும், அப்பற்றுமுறிகளுக்குச் சரிநேர் ஒத்தபடிகள்(Counter-foil) இருக்கவே இருக்கா. அவரவர் விருப்பத்திற்குக் கழிவறைக் கட்டணச் சீட்டுக் கிழிப்பதைப்போல், கிழித்துக் கொடுத்து விட்டுக் காசைக் கறந்துகொள்ள வேண்டியதுதான். இனி, கறக்கப்பட்ட காசு எவ்வளவானாலும், கறப்பவர் தம் தண்டுதல் செலவுக்கென்று தாம் விரும்பும் தொகையை எடுத்துக் கொண்டது போக, (தண்டுபவர்கள் ஒரு குழுவாக இருந்தால், ஆளுக்குக் கொஞ்சமாக அவர்கள் பங்கு போட்டுக் கொண்டது போக) எஞ்சிய தொகையை இயக்கத்துக்குக் கொடுக்க வேண்டியதுதான். பெரும்பாலும் இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், பொதுநலக் கட்சிகள், கழகங்கள், இயக்கங்கள், நிறுவனங்கள் முதலியன யாவுமே, இத்தகைய நடைமுறையிலேயே அல்லது இங்குக் கூறப்பட்டதை விடக் கொஞ்சம் ஊழல் குறைந்த முறைகளிலேயே, பொது மக்களிடமிருந்து அவ்வப்பொழுது பணத்தை உறிஞ்சுவதையே தம் இயக்கங்களின் பொதுவான நடைமுறையாகக் கடைப்பிடிக்கின்றன. இவற்றை நன்கொடைகள் தரும் பொதுமக்கள் அறிந்து கொள்ள வாய்ப்பில்லை. அறிந்து கொண்ட சிலரும் தாங்களும் அதே வழிகளைப் பின்பற்றிப் பொருள் தண்டிக் கொள்ள விரும்புகின்றனரே தவிர, யாரும் கண்டிக்க முன்வருவதில்லை. அவ்வாறு கண்டிக்கவோ, கேட்கவோ முன்வருபவர்களை அவ் வியக்கங்கள் அப்புறப்படுத்தி விடும். எனவே, தெரிந்திருந்தாலும் வாய்திறந்து, வெளியேற்றப்படுவதைவிட, அறிவாளித்தனமாக, அந் நடைமுறைகளைத் தாங்களும் ஏற்றுக்கொண்டு பிழைத்துக் கொள்வதே மேல் என்று பலரும் கருதிவிடுகிறார்கள். அதில் இதில் எண்ணுதபடி, இப்பொழுதுள்ள எல்லா இயக்கங்களிலும் இந்நடைமுறையையே பொதுவாகப் பரவலாகக் காணலாம். கணக்குத் தணிக்கை, பொருளாளர் — என்னும் சடங்கு முறைகளெல்லாம், இந் நடைமுறைகளுக்குள்ளேயே அடக்கமாகிப் போய்விடுகின்றன. அப்புறம் எங்கே வெளியே தெரிய முடியும்?

43 : சில இயக்கங்கள் பணம் தண்டுகிற முறை வேடிக்கையாக இருக்கும். பெரிய கூட்டமோ, மாநாடோ நடத்துவார்கள். தலைவர் மேடையில் அமர்ந்திருந்தவர் பேசுவதற்கு எழுவார். உடனே அவருக்கு மாலைக்குப் பகரமாக (பதிலாக) துண்டுக்குக் பகரமாக, அங்கிருக்கும் ஐந்தாறு பேர்கள், ஆளுக்கு ஐந்தோ பத்தோ கொண்டுவந்து கொடுப்பார்கள். அப்புறம் கூட்டத்திலிருப்பவர்களும் ஒவ்வொருவராய் எழுந்து வந்து தங்கள் கைகளில், இடுப்புகளில் உள்ளதை, 5,3 2,1 என்று எடுத்துக் கொடுப்பார்கள். வரிசை நீண்டு கொண்டே போகும். சில விடங்களில் அரைமணி நேரம ஒருமணி நேரம் கூட இந்த வழிமுறைச் சடங்குகள் நிகழும். தலைவர் கூட்டம் தருகிற பணத்தையெல்லாம் வாங்கி வாங்கிப் பின்னால் உள்ள பொருளாளரிடமோ, துணை யாளரிடமோ தந்தபடி இருப்பார் அவர் அவற்றை வாங்கிக் கன்னு பின்னு வென்று கைகளில் வைத்துக்கொண்டே வருவார். கை நிரம்பியவுடன் சட்டைப் பைகளில் திணித்துக் கொள்வார். வரிசை முடிந்ததும், உடனே பொருளாளர் தங்கள் இயக்கம், சரியான நடைமுறையைப் பின்பற்றுவதாக மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, 'தலைவர்க்கு மாலைக்குப் பகரமாக வந்த தொகை 848 உருபா 63 காசு, என்று ஒலிபெருக்கியில் அறிவிப்பார். இதில் என்ன வேடிக்கையென்றால், வரிசையில் நின்ற யாரும் சில்லறைக் காசே கொடுத்திருக்க மாட்டார்கள்! ஆனால், சில்லறைக் காசையும் சேர்த்துச் சொன்னால்தான் தங்கள் இயக்கம் காசு அளவிலும் கணக்கைச் சரியாக வைத்திருக்கிறது என்பதாகத் தொண்டர்கள் நினைத்துக் கொள்வார்கள் என்பது ஒரு மனவியல் உண்மையன்றோ? அதுவுமல்லாமல், இன்னொரு கமுக்கமும் இதில் உண்டு. தொடக்கத்தில் கொடுத்த ஓர் ஐந்தாறுபேர்களும் இவர்கள் முன்னரே ஏற்பாடு செய்த ஆள்கள்என்பது கூட்டத்துக்கு வந்திருந்தவர்களில் யாருக்குமே தெரியாது என்பதுதான்! நம் இயக்கங்கள் நம் மக்களுக்கு உழைப்பதாகக் கூறிக் கொண்டு எப்படி அவர்களிடமே கொள்ளையடிக்கின்றன என்பதற்கு இஃது ஒரு சிறிய எடுத்துக் காட்டேயாகும்.

44 : இனி, இன்னொரு வேடிக்கையையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்)

(1 பத்தித் தொடர்ச்சி)

முடியும், உன்னால்? நீ அப்படி? உன் தலைவர்கள் அப்படி? எனவே, தூக்கிய வாளை நீ உறையில் போட்டுக் கொள்ளப் போகிறாயா? இல்லை இரண்டில் ஒன்று பார்த்து விடுவதென்று எதிரியின் மார்பை நோக்கி வீசப்போகிறாயா? இந்திராவானாலும் இராசீவ் ஆனாலும் செயவர்த்தனா ஆனாலும் ஒரே கூட்டுக் குடும்பந்தான்! ஆனால்; நீயும் நானுந்தான் வேறு! ஏன் நீயும் உன் தம்பிகளுமே வேறுபட்டுக் கிடக்க வில்லையா? பின் நாம் அழிய வேண்டியவர்கள் தாமே! அழிவதற்காக அழாதே! அழுவதற்காகவேனும் அழி! அழிவைத் தவிர நமக்கு வேறு வழியில்லை, நாம் ஒன்றுபடாத வரை! ○

விடுதலை பெறுவது, அது முதல் வேலை!

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

தமிழீழ அரசியலில் அகப்புற அழுத்தங்கள்!

— "குண" —

(1) இந்திய அரசு:

இந்திய அரசையும், அரசியலையும் சரியாகப் புரிந்துக் கொள்ளாமல் இந்த இந்திய அரசுக்கு தமிழீழத்தின் மீதிருக்கின்ற அக்கறையைப் பற்றிப் புரிந்துக் கொள்ள முடியாது. இந்திய அரசு ஒரு பன்னாட்டின் அரசு. ஆயினும், அந்தப் பன்னாட்டின உண்மையை முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்று மறைத்து வைத்து, 'பாரதம்' என்னும் புதிய பார்ப்பனியக் கொள்கைக்குக் கடை விரிக்கின்ற ஒரு பேரரசு, "இந்தியா" என்றும் ஒப்போலைக்(ஓட்டுக்) காக ஒரே தேசமாக இருந்து வந்ததென பொய் சொல்லி வருகின்ற ஓர் அரசு. ஒரு தொடர்ச்சியான நிலப் பரப்பாகிய துணைக் கண்டத்தில் பல்வேறு மக்கள் வாழ்கையில் இந்தியா ஒரு நாடு (Country) என்பது உண்மைதான். வன்படையும், குடியும், காவலும், பொருளியலும், ஆட்சிமுறையும், சட்டமும் ஒழுங்கும் ஒன்றாக இருப்பதனால் இந்தியா ஓர் அரசு (State) என்பதும் உண்மைதான். ஆனால், ஒரு பொது மொழியும், பொதுவான பண்பாடும் ஒரே சீரான பொருளியலும் அவை யாவற்றிற்கும் ஒரு பொது வரலாறும் 'இந்தியர்" என்னும் பொது உளப்பாடும் இன்மையால், அஃது ஒரு தேசம் (Nation) ஆகாது. இந்நிலையில், இந்தியாவென்பது ஒரு பன்னாட்டின அரசு மட்டுமாகும். அஃது இந்திய அரசிற்குள் அடங்கிய பல தேசிய இனங்களை ஒடுக்கியாள்கின்ற ஒரு பேரரசு. தரகு முதலாளிய, பார்ப்பனிய வணிக (பணியா) நலன்களை அடிப்படையாகக் கொண்டு இயக்கப்படுகின்ற துணை வல்லரசு (Sub-imperialism). இதனுடைய அண்டை நாடுகளுக்கு ஓர் அச்சுறுத்தலாகப் பெரிய ஆண்டையைப் போல் நடந்துக் கொண்டு மேலாவித்தனம் (Hegemony) பாராட்டுகின்ற வல்லரசு. ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்ட உள்நாட்டு அரசுகளையெல்லாம் முதன் முதலில் ஒன்றாகக் கட்டி ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்தபோது தோன்றிய அடிமைத் தனத்தின் அடிப்படையிலான ஒற்றுமையே இதனுடைய ஒருமைப்பாடு.

இந்த இந்திய அரசு ஆங்கிலேயர் விட்டுச் சென்ற படைக் காலணிகளில் (பூட்சுகளில்) தன்னுடைய காலை நுழைத்துக் கொண்டது முதல் நாகர்கள், மிசோக்கள், மணிப்பூரின் மெய்டெய்கள், காசுமீரியர், பஞ்சாபியர், தமிழர் ஆகியோரின் தேசிய வேட்கைகளை ஒடுக்கி, எண்ணரிய கொலை வேட்டையாடி, அரத்தம் குடித்து, அலைகின்ற பேயரசு. இத்தகைய அரசு தமிழீழத் தமிழர்களும், சிங்களர்களும் இரு வேறு தேசிய இனங்களென்னும், அடிப்படைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை நடைமுறையில் நாம் பார்க்கிறோம். தமிழீழத் தமிழர்களையும் சிங்களர்களையும் அஃது இரு மொழியினங்களென்றும், இரு மதத்தினரென்றும், சிறுபான்மையர்- பெரும்பான்மையர் என்றும் மட்டுமே பார்க்கிறது. தன்னுடைய சொந்த நிலவியல் அரசியல் (Geo-political) நலன்களைக் கருதி இலங்கைத் தீவின் இன்றைய இன முரண்பாட்டில் ஆர்வம் காட்டி வருகின்றது.

இந் நிலையில், தமிழீழ மக்களின் தனிநாடு முழக்கத்தை அது கொள்கையளவில் இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், 1983 சூலை இனப்படுகொலையை சிங்களர்கள் நடத்தியபோது, தமிழகத் தமிழர்களிடம் எழுந்த உணர்வலைகளால் எழுந்த புதிய சூழல், வேண்டா வெறுப்புடன் சில உதவிகளைச் செய்யுமாறு இந்திய அரசை ஒரு கட்டாயத்திற்குள் ஆழ்த்தியுள்ளது. இலங்கையில் மலையகத் தமிழர்களின் குடியுரிமை நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பறிக்கப்பட்டபோது எழுந்த மனக்கசப்பும், குடியுரிமையில்லா மலையகத் தமிழர்களைப் பெரும் எண்ணிக்கையில் நாடு மீண்டோராக மீண்டும் ஏற்றுக்கொள்ள வேண்டி வந்ததால், வந்த அழுத்தங்களும் உள்ளுக்குள் அதற்கு உறுத்திக்கொண்டுதான் இருந்தன. சிங்கள இனவெறி அவ்வப்போது எழுப்பிய இந்திய எதிர்ப்பு அரவங்கள் அந்தக் கசப்புணர்ச்சியைப் பெருக்கத்தான் செய்தன. ஆனால், இடையில் வந்த திருவாட்டி பண்டாரநாயகாவின் தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அரசு சேகுவெரா சார்பு இளைஞர்களால் அச்சுறுத்தப்பட்டபோது, இந்த இலங்கை அரசு அந்தப் படையெழுச்சியை அடக்க ஆட்களையும் படைக் கலன்களையும் தந்து உதவியது. இந்து மாக்கடலில் தன்னுடைய எதிர்ப் புரட்சிக் கொள்கையை உலகுக்குக் காட்டியது.

ஆனால், அமெரிக்க சார்பு செயவர்த்தனாவின் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், இந்தியப் பேரரசிற்கும், இலங்கை அரசிற்கும் இடையிலான உறவு மாறிக் கசப்பு உணர்ச்சி வலுப்படத் தொடங்கியது. திருகோணமலையிலிருக்கின்ற கப்பல் தளம், அமெரிக்காவின் பிடிப்புக்குள் போய்விடுமோ வென்னும் அச்சம் அதற்கான காரணியங்களில் ஒன்று. மற்றது இந்து மாக் கடலில் தன்னுடைய மேலாண்மைதான் இருக்க வேண்டுமென்னும் உள்ளார்ந்த அக்கறையும், வேட்கையும் ஆகும்.

இந்நிலையில், 1983-ஆம் ஆண்டு, சூலை இனப் படுகொலை, உலகத்தையே ஓர் உலுக்கு உலுக்கியது. தமிழீழத் தமிழரும், சிங்களர்களும் இனி உள்ளத்தால் முற்றாகப் பிரிந்துவிட்ட நிலை உலகத்திற்குத் தெளிவாகியது. போதாமைக்குக் கூறப்படும் 'இந்திய வழி'த் தமிழர்களென்னும், மலையகத் தமிழர்களை அந்த இனக் கலவரத்தில் மிகப்பெரும் தாக்குதல்களுக்குள்ளாயினர். சிங்கள இனவெறி அரசு இந்தியாவிற்கு எதிர்ப்பான அரசியலை மிகைப்படுத்தியது. பல்லாயிரம் இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்கு ஏதிலிகளாக ஓடி வந்தனர். இந்நிலையில், இந்தியத் துணை வல்லரசு, ஏதோ ஒருவகையில் இலங்கை நடப்புகளில் தலையிடவேண்டிய நெருக்கடி முற்றியது. அதனால், இந்திய அரசு தலையை உருட்டிக்கொள்ள நேர்ந்தது. அதையொட்டி அதற்குச் சில உத்திகள் உருவெடுத்தன:

(1) இலங்கையின் ஒற்றை அரசை கட்டிக் காக்கின்ற வகையில், வட்டரங்கு மாநாடு கூட்டி ஓர் அரசியல் தீர்வை உருவாக்கி, தமிழ்ப் பகுதிகளுக்குத் தன்னாட்சியைப் பெற்றுத் தருவதின் வாயிலாக இலங்கையின் 'ஒருமைப்பாட்டை'க் காப்பது;

(2) தமிழர்களும், சிங்களர்களும் சேர்ந்து வாழவே முடியாது என்கின்ற நிலையில், வங்காள தேசத்தைப் பாக்கித்தானிடம் இருந்து விடுவிக்கச்செய்த இந்தியப் படையெடுப்பு முறையைக் கையாண்டு, அங்கு ஒரு முசுபுர் இரகுமானை உருவாக்கித் தன்னுடைய அரவணைப்பில் வைத்துக் கொள்வது; அஃதாவது, தமிழீழத் தரகுமுதலாளிய நலன்களைச் சார்ந்த அடிமை அரசை நிறுவுவதன் வாயிலாகத் தன்னுடைய பொருளியல் நலன்களை வலுப்படுத்திக் கொண்டு, திருகோணமலையின் மீதான பிடிப்பைத் தாம் பெறுவது; இதுவே 'வங்கதேச'த் தீர்வு முறை;

(3) தமிழீழத்தைக் காக்கப்போவதாகச் சொல்லிப் படையெடுத்து, அமிர்தலிங்கத்தை அடிமைத் தலைவனாக அமர்த்தி, அவருக்கு முட்டுத்தாங்கி முதலாளிய தமிழனைக் கொண்டே, தமிழினத்தில் இருக்கின்ற புரட்சி அணிகளையும் இயக்கங்களையும் ஒழித்துக் கட்டுகின்ற எதிர்ப் புரட்சிப்பணியைச் செய்தல்; பின்னர், தமிழீழத்தை தன்னுடைய இருபத்து மூன்றாவது மாநிலமாக வலிய இணைத்துக்கொள்ளல்;

(4) இதன் வழியாக உதிரி (Lumpen) அரசியலில் மயங்கி உறங்கிக் கொண்டிருக்கின்ற தமிழகத்தின் இளைஞர்களைத் தமிழீழப் புரட்சிக் காற்று மறைமுகமாகத் தட்டியெழுப்பலாம் என்றஞ்சி, அத்தகைய ஏதம் வாராமல் தடுக்கவேண்டி, தமிழீழத் தமிழர்களின் சிக்கலுக்கு இப்படியோ, அப்படியோ ஒரு தீர்வைக் காண்பது;

(5) இந்திய-சோவியத்துச் சார்பாளரான திருவாட்டி பண்டாரநாயகாவின் ஆட்சியை மீட்கும் வகையில் இலங்கையின் மீது படையெடுத்து, அவர் வாயிலாக இலங்கையின் 'ஒருமைப் பாட்டுக்குள்' ஒரு தீர்வைக் காண்பதற்கான சூழ்நிலையை உருவாக்குதல் என்பவையே அவையாம்.

இந்த நிலையில், சி. பார்த்தசாரதி என்னும் சாணக்கிய சூழ்ச்சி மிக்க தமிழ்ப் பார்ப்பனரை விடுத்து, அமிர்தலிங்கத்துடன் ஓர் உடன்பாடு செய்துக்கொள்ளச் சொல்லி, செயவர்த்தனாவைக் கூட்டச்

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

உ.த.மு.க. உறவு மடல்

'பிரச்சனை'யும் சிக்கல்தான்!

இரா. வேலுச்சாமி 'மொழிப் பிரச்னை...' என்று ஒரு புதுப்பா எழுதி, 7-10-1984 ஆனந்த விகடனில் வந்துள்ளது. அஃது ஒரு'காதல்'செய்தி என்றபோதும் அதில் 'மொழி' பற்றிய சிக்கலை எழுப்பியுள்ளார்!

'காதல்' என்ற இயற்கை யுணர்வு, மாந்தர் உலகிற்குப் பொது. மாந்தன் அறிவு நிலை வளர்ச்சியில் 'பல படிகளில்' நிற்கிறான்! அவனை 'உலகில் காதல் மட்டுமே பெரிது' என்று பின்தள்ளிவிட முயல்கிறார். இரா. வேலுச்சாமி!

திரைப்படத்தில் தொடக்கக் காலத்தில், நாடகத்தில் 'பிரிய சகி', 'பிராண நாதா' என்றெல்லாம் உரையாடிய காலம் உண்டு. 1984 இல் அதைக்கொண்டு வர நினைத்தால் 'சண்டைக்கு' வராமல் என்ன செய்வார்கள்? 'பாரதி' தப்பிவிட்டான். இன்று இரா வேலுச்சாமி எப்படித் தப்பிவிட முடியும்? 'தமிழின தேசிய உணர்வு' சுடர் விடுகின்ற காலத்தில் 'இரா.வீ. இருப்பதை மறந்துவிடக் கூடாது.

காதலியை, 'என்னை, நீ, பிரிய, சகி' என்பது போன்ற நயம் இருப்பதைக் காட்டிப் புதுப்பா வலவர் மகிழலாம்! பிறரும் அதனால் 'மகிழ்ந்து' போகலாம்!

தன்னைப் பெற்ற அன்னை இறந்து நிற்க, மகன் கொடிகட்டி 'அன்னதானம்' செய்யவும்-பெற்ற தந்தை தடுக்கி வீழக்கண்டு; பிள்ளைகள் கைதட்டி மகிழவுமான இழி நிலையை நாம் எப்படி வரவேற்பது? எங்ஙனம் பொறுப்பது?

"மொழிச் சிக்கலை முன் வைத்து ஒரு தேசத்தையே முட்டாளாக்கி விட்டவர்கள்" என்று பேசும் புதுப்பா வலவர், 'யாரை மகிழ்விக்க' இந்த 'ஆனந்த விகடன்' ஆனாரோ? தமிழ்நாட்டில் 'இந்தி எதிர்ப்பில் எழுந்த தமிழாட்சியை, மகிழ்விக்கவா?, அல்லது, 'இந்திச் சிக்கலால்' இந்த 'தேசத்தை முட்டாளாக்கும்' நடுவணரசையா?

மொழிச் சிக்கலை முன்வைக்கக் கூடாது. சரி, பின் வைக்கவாவது இங்கே இடம் உள்ளதா? 'விடுதலை பெற்றதாகக் கூறும் "பாரதத்தில்", இன்னமும் நமக்குள்ள பொருளியல் அடிமைத் தனத்தை'யாவது இவர் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். மாறாக, 'ஆண்-பெண்' காதல் உறவையே முன்வைத்துப் பேசும் இவர் 'மொழிச் சிக்கலை' முன்வைப்பதை ஏன் எதிர்க்கிறார்?

'தேசிய இன எழுச்சி'யை இவர் டுக்க முனைகின்றாரா என்ன?

'புனிதமான காதல்' பற்றிப் பேசும் இவர்கள், மொழியடிமைகளாகிப் பண்பாட்டிழிவுக் காளாகியுள்ளவர்களைப்பற்றிக் கருதிப் பார்ப்பதில்லை!

"சொந்த மொழியில்தான்
நேசித்துக் கொள்ள வேண்டும்"

என்று 'யாரோ' இவரிடம் தனியாகக் கூறியிருக்க வேண்டும்! 'நாம் சொந்த மொழியினை நேசிக்கக் கூடாது' என்பதைத்தான் எதிர்க்கிறோம்!

"வசதியான மொழியிலேயே
நம்
வாழ்வைத் தொடங்கலாம்"

என்றால், என்ன பொருள்?

காதல் பாட்டுதான் என்றாலும், அது பரப்பும் கருத்துக் கேடுகளைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது!

ஆகவே, 'வசதியான மொழி' என்பது 'தாய் மொழி'யாகவே இருக்கமுடியும்? 'இரு நாட்டுறவில்' ஏற்படும் 'இணக்கம்', நம் உரிமையைக் காவு கொடுப்பதாக இருக்கக் கூடாது என்பதில் நாம் விழிப்பாகவே இருப்போம்!

எனவே, "விழிகளே போதும்
மொழிகள் எதற்கு—?"

என்பவர்கள், 'கருத்துக் குருடர்கள்'.

'கவர்ச்சி யடிமைகள்!'
"போலிப் புணர்ச்சிகள்"

நாம் 'நம் இனக் காதலை'ப் பேசுகிறோம்...அவர்கள் 'விலங்கினக் காதலை' விரும்புகிறார்கள்! அப்படித்தானே!

மொழியும் ஒரு சிக்கல்தான் என்பதை இவர்கள் மறுக்க முனை'கிறார்கள்' அ'து...எடுபடாது; இயல்பும் ஆகாது!

-பறம்பை அறிவன்

இந்தியா பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு!

தமிழீழ விடுதலை ஆதரவுப் பொதுக்கூட்டம்!

கோவை மாவட்டம், பல்லடம் அம்மா பாளையத்தில் தமிழீழ ஆதரவுப் பொதுக்கூட்டம்; 10-5-'85 வெள்ளியன்று சிற்றூரெனினும் சிறப்புற நடந்தது. ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள், கூட்டத்தை அமைந்து கேட்டனர். இந்நிகழ்வு அவ்வூர் இளைஞர்களால் 'தமிழீழ விடுதலைத் தோழமைக்கழகம்' என்னும் அமைப்பின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்திற்கு திரு. சி. மணி தலைமையேற்று, திரு. கு. மெய்யறிவுத் திருமேனி வரவேற்புரை ஆற்ற தென்மொழி ப. துரையரசன் அவர்கள், ஈழப்போராளிகள் தோழர் சிவம் (த.ம.வி.கூ.), தோழர் சுந்தர் (த.ம.வி.கூ.) ஆகியவரை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். அவரையடுத்துப் போராளி தோழர் சுந்தர், தமிழீழ நாட்டில் நிகழ்த்தப்பெறும் கொடுமைகளைக் கூறியும், அறப்போரால் ஆக்கம் விளையா நிலையில்தான் கருவிகளைக் கையாண்டதாயும், தம் நிலை விளக்கித் தன் உரையை விலக்கிக்கொண்டார்.

அடுத்து, போராளி தோழர் சிவம் (மட்டக்களப்புச் சிறையுடைப்பில் மீண்டவர்) தமிழ் ஈழத்தில் இழைக்கப்படும் எண்ணவொண்ணுக் கொடுமைகளையும், சாமும் தம்முடன் தளை (கைது) செய்யப்பட்ட போராளிகளும், சிறையில் பட்ட துன்பங்களையும், கல்வி, பொருள், அரசுப்பணி, படை மற்றும் காவல் போன்ற துறைகளில் தமிழர் பின் தள்ளல் செய்து அழுக்கப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்ட நிலைகளையும் கூறி, தமிழக மக்கள் எமக்குப் பொருளுதவி மட்டுமன்றித் தமிழீழ விடுதலையை, உலக ஒன்றியப் பேரவை (ஐ.நா.)யில் ஏற்றுக்கொள்ளு (அங்கீகரிக்கு)மாறு குரல்கொடுக்க நடுவண் அரசைத் தூண்டுமாறு தமிழ் நாட்டரசை வற்புறுத்தும் முகமாகப் பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தி, 83-எழுச்சியை விடப்பொங்கி எழுந்து ஆர்ப்பாட்டங்கள் நிகழ்த்தவேண்டும் என்றும் "அழுதழுது பெற்றாலும் அவள் தான் பெறவேண்டும்" என்பது போல, எமது நாட்டு விடுதலையை நாமே வென்றெடுப்போம். அதற்குரிய வலிவும், ஆற்றலும் எமக்கு இருக்கின்றன. அதனால் இந்தியப் படையை அனுப்ப நீங்கள் கோர வேண்டாம், எம்நாட்டை உலக ஒன்றிய அவை (ஐ.நா.) யில் ஏற்க (அங்கீகரிக்க)ச் செய்யுமாறு நடுவண் மற்றும் தமிழ்நாட்டின் அரசையும், வற்புறுத்துவதே நீங்கள் எம் விடுதலைக்குச் செய்யும் பேருதவியாக இருக்கும் எனவும் கூறித் தம்முரையை நிறைவு செய்தார். பின்பு அம் மேடையிலேயே போராளிகளுக்கு உருபா 177-50 தண்டல் ஆனது. பின்பு திரு. நாகராசு நன்றி கூறக் கூட்டம் நிறைவுற்றது.

இதுபோன்ற தமிழீழ ஆதரவுக் கூட்டங்கள் இன்னும் பல ஊர்களில் நடத்த அந்தந்த ஊர் இளைஞர்கள் தோழமைக் கழகங்கள் அமைத்து ஏற்பாடு செய்து வருகின்றனர்.

-செய்தி: த. கவினரசு, பல்லடம்

உங்கள் மடல்கள்

முதல் திட்டமே நன்றாகவுள்ளது!

மாண்புமிகு ஐயா, வணக்கம். 12-5-85 - இல் மாநிலந் தழுவிய உ. த. மு. க. செயற்குழுக் கூட்டம் எவ்வகைக் குறைவும் இன்றி இனிதே முடிந்தது. போராட்டம் பற்றிய அறிவிப்பு யாவருக்கும் மகிழ்ச்சியை யூட்டியது. முதல் திட்டமே மிக நன்றாய் உள்ளது என என் சிந்தனை உள்ளம் நிறைவு பெற்றுள்ளது.

போராட்டக் காலத்தில் நானும் கலந்துகொள்ள ஆவல். விருப்பம் ஆயின் தங்களுடைய ஆய்வுப்படியே நடந்துகொள்வேன்.

சூலைத் திங்களில் உங்கள் சுற்றுச் செலவிற்கு வேண்டும் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறேன். கல்லிடைக் குறிச்சியிலிருந்து புது இளைஞர்கள் உங்களுக்கு நிகழ்ச்சி பற்றி அறிவிப்பார்கள். வணக்கம்.

தங்கள் அன்புமிக்க, அதியமான்.

செயற்குழு மிகச்சிறப்பு!

பேரன்பிற்கினிய இளவல் பொழிலன் அவர்கட்கு, வணக்கம். நலம். நலமே யாண்டும் விளைக. ஈரோடு, உ. த. மு. க. மாநிலச் செயற்குழு, மிகவும் சிறப்பாக அமைந்தியங்கியது மகிழத் தக்கதாகும்.

கருத்தரங்கில் இடம்பெற்ற உங்களின் சீரிய கருத்துகள், அதனையொட்டிப் பாவலரேறு ஐயா அவர்கள் அளித்த விளக்கம் குறிப்பிடத் தக்கனவாய் இருந்தன.

பள்ளி திறக்கப்பெற்றதும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு. தமிழ்நிலம் இதழ்கட்கு நிறைய உறுப்பாண்மை பெற்று அனுப்பிவைக்கிறேன்.

இந்த இளைய அகவையில் ஐயாவுக்குத் துணையாக ஆற்றிடும் உங்கள் பணிகள் மிகப் பெரியனவாகும்; வியக்கத்தக்கனவாகும்.

ஐயா, அவர்கட்கு என் வணக்கத்தையும், அன்பையும் தெரிவியுங்கள். இவண்,

—கடலூர் மணிமாறன்.

தமிழக அரசு தடை செய்யுமா?

கடந்த கும்பம் 16 ஆம் பக்கல் (27-2-1985) திருவண்ணாமலையிலுள்ள இரமணர் பாழிக்கு வருகை தந்த துணைக் குடியரசுத் தலைவர் வெங்கடராமன் தெரிந்தோ-தெரியாமலோ ஓர் உண்மையைக் கக்கியிருக்கிறார்.

"உணவுப்பொருள் ஆக்கத்தில் தன்னிறைவு ஏற்பட்டுள்ளது. எனினும், உணவுப் பற்றாக்குறைக்கு, மக்கள் பெருக்கமே பெரும் காரணமாக உள்ளது. (சராசரி) மாந்தனின் வருமடியும் இதனால் குறைந்து வருகிறது" என்று கூறிய வெங்கடராமனுக்கு, இந்துமுன்னணி பொங்கலன்று பத்துக்குழந்தைகளைப் பெற்ற பெண்களுக்கு 'வீரத்தாய்' பட்டமும், பரிசாக உருபா ஐந்நூறும் நல்கியது தெரியாதா? அதற்கு ஏன் கண்டனம் தெரிவிக்கவில்லை?

சரி போகட்டும். இந்து முன்னணி இப்பொழுது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எதிர்த்துப் போராடத் தீர்மானம் செய்திருக்கிறதே. விடைத் திங்கள் 6 ஆம் (19-5-1985) பக்கல், அது நடத்த இருக்கும் போராட்டத்தில், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட விளம்பர அறிக்கையின் படியை, எரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறதே. (தினமலர் 20-4-85) இதற்கு வெங்கட்ராமன் என்ன செய்யப்போகிறார்? இராசீவிடம் சொல்லி இந்து முன்னணியின் கொட்டத்தை அடக்குவாரா? அல்லது மக்கள் பெருக்கத்தினால் உணவுப் பற்றாக்குறையே ஏற்பட்டு விட்டுப் போகட்டும் என்று வாளாவிருந்து விடுவாரா?

இனி, குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்தி எடுக்கப்படும் திரைப் படங்களுக்குப் பரிசு வழங்கும் திட்டங்களை அறிவித்த தமிழக அரசேனும் இந்து முன்னணியின் போராட்டங்களைத் தடை செய்யுமா? இல்லை...... தான் பார்ப்பன அடிமைஅரசுதான் என்று பல்லிளிக்குமா?

— வள்ளிகேள்வன்

(ஆசிரியர் குறிப்பு: உண்மை என்னவென்றால், தமிழர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்வதைப் பார்ப்பனர்கள் வரவேற்கிறார்கள். ஆனால் பார்ப்பனர்கள் தங்கள் இனத்தைப் பெருக்கிக் கொள்ளவே முற்படுகிறார்கள் என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். இளித்தவாய் அடிமைத் தமிழர்களுக்குத்தாம் எதுவும் புரிவதில்லையே!)

தமிழீழ........ அகப்புற அழுத்தங்கள்!

(4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இலங்கை அரசு, இந்தியாவின் பார்வைத் திருப்பலைப் பயன்படுத்திக்கொண்டு, ஈழக் கரையிலிருந்த 35,000 மீனவர்களின் பிழைப்பில் மண்ணை வாரிப் போட்டு, அவர்களை அப்புறப்படுத்தியது, ஈழக் கடற்கரையில் தன்னுடைய கடற்காவல் சுற்றை வலுப்படுத்தியது. தமிழகம் சார்ந்த மீனவர்கள் பலர் சிங்களக் கடற்படையினரால் கொல்லப்படவும் அலைக்கழிக்கப்படவும் நேர்ந்தது. தமிழக மீனவர்கள் அதனால் கிளர்ந்தெழுந்தனர். வேலை நிறுத்தம் செய்து தொடர் வண்டிப் போக்குவரத்தையும் நிறுத்தினர். இடையே இலங்கை மீது படையெடுக்கக் கூடாதென்றும் முதலாளிய வல்லரசு நாடுகளின் அழுத்தம் வேறு இந்திய அரசைக் கைபிசைந்து கொண்டு நிற்க வைத்துள்ளது. இதனால் நடத்திய கூத்துத்தான் சென்ற சனவரித் திங்களில், இந்தியக் கப்பற்படை ஒரு சிங்களக் கடற் சுற்றேவல் கலத்தை கைப்பற்றியது ஆகும். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர், இந்தியா இப்போதைக்கு படை கொண்டு தமிழீழத்தில் 'தலையிடாது' என்பது விளங்குகின்றது. ஆயினும், தமிழீழ விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு தில்லிக்குக் காவடி தூக்கிச்சென்று, இலங்கையின் மீது படையெடுத்துத் தங்களை அரியணை ஏற்றும்படி தில்லித் துணை வல்லரசிடம் இரந்து நின்றது. இதுவே தமிழீழப் புரட்சியின் மிகப்பெரும் புறக்கூறாகிய இந்தியாவின் இன்றைய இரண்டும் கெட்ட நிலை. தமிழீழப் புரட்சிக்கு, இந்தியா ஆவின் தோல் போர்த்த ஒரு புலி; நயவஞ்சகம் மிக்க நரி.

செய்த வட்டரங்க மாநாடு தோற்றது. சிங்கள இனவெறிக்கும் பிரிந்தரும் சூழ்ச்சி தெரியாதென அறிந்து, இந்தச் சாணக்கியன் போய்ப் புகட்டியும் பயனில்லாமல் போனது. இதற்கிடையில் செயவர்த்தனவின் மீது ஓர் அழுத்தத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் துமுக்கி ஏந்திய விடுதலை அணியினருக்குச் சின்னஞ் சிறு உதவிகள் அளிக்கத் தொடங்கியது இந்தியப் பேரரசு. அமிர்தலிங்கத்தின் அரசியல் சுற்றத்திற்குத் தமிழீழ மக்களிடம் சல்லிக்காசும் மதிப்பில்லாத நிலையும், புரட்சி விடுதலை அமைப்புகளின் வளர்ச்சியும், அதற்குரிய மற்றொரு காரணியமாகும். சென்ற ஆண்டு ஆந்திராவில் என். டி. இராம இராவ் அவர்களின் அரசைத் தில்லி வேண்டுமென்றே கலைத்தபோது, ஏற்பட்ட எதிர்ப்பு இயக்கத்தைக் கண்டு அஞ்சி இலங்கைமீது படையெடுக்கின்ற திட்டத்தைத் தற்காலிகமாக அது கைவிட்டதென்பது ஒரு செவி வழிச்செய்தி. இடையில், இந்திராவைச் சுட்டுக் கொன்றது அத்தகைய "இந்தியத் தீர்வினை" மேலும் ஒத்திப் போட்டது. பின்னர் இராசீவ் காந்தி முடிசூட்டிக் கொண்டார்.

- தொடரும்)

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும். கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல்; முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- அமைச்சர்.

நாடக ஆசிரியர் அதியமான் ஓய்வு பெற்றார்!

20-4-85: தாழையூத்து ஆசிரியர் நடுவாண்மைக் கூட்டம், தாழையூத்து நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. கட்டளை டி. டி, டி. ஏ. பள்ளித் தலைமையாசிரியர், திரு. உரூபன் செயக்குமார் தலைமை தாங்கினார். நடுவ ஆசிரியர்கள் அனைவரும், தமிழ்த்தாய் வாழ்த்தினைப் பாடினர். செயலர் அனைவரையும் வரவேற்று அறிக்கைகள் படித்தார். இக்கூட்டம் குப்பக்குறிச்சி பள்ளித் தலைமையாசிரியர் திரு. அதியமான் (மா. அனந்தயா) அவர்களுக்கும் தாழையூத்து ஆசிரியை திருவாட்டி. உச்சிமாளி அவர்களுக்கும் விடைபெறு விழாக் கூட்டமாக நடைபெற்றது. விடைபெறும் இரு ஆசிரியர்களையும் பாராட்டி, ஆசிரியர்கள் மரியசம்பூரணம், பியாரிசாண் பேகம், அருமைநாயகம், சொரணமணி, செல்லையா, தேவ பிச்சை, முத்துக்கிருட்டிணன் ஆகியோர் பேசினர். வியாழன் போது ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்குக் கைப்பெட்டியும், அடுக்குச் சட்டியும் வழங்கி, கைத்தறி ஆடை போர்த்தி மகிழ்ந்தனர். பரிசுப் பொருள்களைப் பெற்று விடைபெறும் ஆசிரியர்கள் நன்றியுரைத்தனர்.

அதியமான் என்ற அனந்தையா அவர்களின் உரையின்போது மொழி, இனம், நாடு ஆகியவற்றிற்குத் துணிவுடன், தொடர்ந்து தொண்டாற்றப்போவதாகக்கூறி, ஓய்வுறும் நாளின் நினைவாக ஓராண்டு 'தென்மொழி'த் தனிகை உறுப்பாண்மைக் கட்டணமாக உருபா 15-00 (உருபா பதினைந்து) மட்டும் காசோலை மூலம் வழங்கினார்.

செயலர் ந. முத்துக்கிருட்டிணன், அனந்தையா அவர்களின் வள்ளாண்மையைப் பாராட்டியும், அனைத்துக்கும் நன்றியும் தெரிவித்தார். நாட்டுப் பண்ணுடன் கூட்டம் முடிந்தது.

செய்தி: ந. முத்துக்கிருட்டிணன், தாழையூத்து

தமிழக அரசே! தமிழீழப் போராட்டப் படை அமை!

தமிழீழப் போராளிகளுக்கு அன்பளிப்புகள்!

திருச்சி, பெல் தொழிலக வாயில் கூட்டம்!

PLOT விடுதலைப் போராளிகளுக்கு அன்பளிப்புகள்:

திருச்சி, 'பெல்' நிறுவனத் தொழிலகப் பகுதியில், வாயில் கூட்டமொன்று சென்ற 11 4 1985 அன்று 'பெல்' தொழிலாளர் சார்பில் நடைபெற்றது. கூட்டம் சரியாக மாலை 4-30 மணி அளவில் தொடங்கப் பெற்றது. ஆலைப்பணி முடிந்த நேரம் ஆகையால் அனைத்துத் தொழிலாளர்களும் கூட்டத்திற்குச் சரியான நேரத்திற்கு வந்து, தமிழீழ மக்கள விடுதலைக் கழகச்செயலாண்மையர் திரு. முகுந்தனின் பேச்சைக்கேட்க திரளாகக்கூடியிருந்தனர். சரியாக, 4-30 மணிக்கு செயலாண்மையர் உமா-மகேசுவரன (முகுந்தன்), தமிழீழ விடுதலைப் படைத்துறைச் செயலர் திரு. செந்தில், தமிழீழ மாணவர் பேரவைச்செயலர் திரு இரவிவர்மா, ஆகியோர் வந்தனர். திரு. குழந்தை ஈகவரசன், ஈழத் தமிழர் தொடர்பான பாடல்களைப் பாடினர். திரு நாரா மகிழ்நன் (உ. த. மு. க) நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினர். திரு. இமயவரம்பன் வரவேற்புரையாற்றினர். பின்னர், திருவாளர்கள்: மகாலிங்கம், (பொதுச் செயலாளர்) அண்ணு தொழிலாளர் சங்கம், (ஏ டி.பி.); இராச மாணிக்கம் (தொழிலாளர் முன்னேற்றப் பேரவை; பணிதாசன், (பொதுச் செயலாளர் (பி பி. இ. வி) தங்கமணி (எ.ஐ டி.யு.சி); சிங்கராயர் (பி.சி டி யு); சினி. அருணகிரிநாதன் ஆகிய தொழிற் கழகப் பேராளர்களுக்குப் பின்னர், திரு இரவிவர்மாவும், திரு செந்திலும் உரையாற்றினர்கள்.

இறுதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலாண்மையர் திரு. உமா-மகேசுவரன் உரையாற்றினர்கள். அவர்தம் உரையில் குறிப்பிட்டதாவது: இலங்கைத் தீவு பன்னெடுங் காலத்திற்கு முன்பு தென் தமிழ் நாட்டுடன் இணைந்திருந்தது. கடல் கோளால் இலங்கை பிரிக்கப்பட்டதே ஒழிய ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டுடன் தொடர்புடையவர்களாகத்தாம் உள்ளனர். 'பஃறுளி ஆற்றுடன் பன் மலை யடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள' எனும் இளங்கோவடிகளின் பாடலுக் கிணங்க இரு தமிழகமும் ஒன்றுபட்டிருந்தது. சிங் களவர்தாம் வந்தேறு குடிகளாவார். நீண்ட நெடுங் காலமாகத்தனித்தனியே ஆண்டுவந்த தமிழ், சிங்கள அரசுகளை, பிரித்தானிய அரசு ஒன்று சேர்த்தது. அன்று 1948 இல் 80 விழுக்காடு இலங்கை அரசுக்கு வருமானம் தேடித்தந்த மலையகத் தமிழர்களின் குடி யுரிமை பறிக்கப்பட்டது; வடகிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து சிங்களக் குடியேற்றம், காணியழிப்பு நடந்து வருகிறது. 67 பாராளுமன்ற உறுப்பினர் களில் 24 பேர் உறுப்பாண்மை தாங்கினர் இன்று யாருமில்லை. மொழியுரிமை பறிக்கப்பட்டது; தமி ழர்களின் உயர் கல்வி மறுக்கப்பட்டது. யாழ்ப் பாண நூலகம் எரிக்கப்பட்டது. இறுதியாகத் தமி ழர்களைக் கொன்றொழித்தே தமிழினத்தை ஒழித்து விடலாம் என்றெண்ணி, இன்று அந்த நிலையினைச் செய்து வருகின்றனர். இரு வேறு தேசிய இனங்கள் வாழ்ந்துவரும் இலங்கையில், தமிழீழத்தேசிய இனப் போராட்டம் கூர்மைப்படுத்தப் பட்டுள்ள இன் றைய நிலையில், அங்கொன்றும் இங்கொன்றும் தாக்குவதான கொரில்லாப் போராட்டம் தமிழீழ மக்களுக்கு விடுதலை வாங்கித்தராது; ஏதிலிகளாகத் தாம் மக்கள் வரமுடியும். ஏதிலிகளாக இங்கு அனுப்பிவிட்டு மக்களைச் சார்ந்து போராடமுடி யாது. இயக்கங்கள் ஒன்றிணைந்து ஒரு செயல் திட்டம் வழிதான் போராடவேண்டும். அதுவே விடுதலைக்கான சரியான வழிமுறை' என்று மிகவும் தெளிவாகப் பேசினர்கள்

குழந்தை ஈகவரசன் நன்றியுரை கூற கூட்டம் இனிதே முடிந்தது.

பாரத மிகுமின் தொழிலக வாயில் கூட்டங்களிலே இதுவரை கட்சித் தொடர்பற்ற நடுநிலையான கூட்டம் (ஏறத்தாழ 3,500 பேர் கலந்துகொண்டது) நடைபெற்றதில்லையென நீண்டநாள் பணி புரிந்து வருகின்ற தொழிலாளர்கள் கூறியது நினைவு கூரத்தக்கது கூட்டத்தில் தமிழீழ மாணவர்கள் துண்டேந்திய வகையில் உரு. 3064-55 கிடைத்தது. அதனையும் போராளிகளிடம் சேர்த்துவிட்டோம்.

செய்தி : குழந்தை ஈகவரசன்.

மூலனூரில் பொருளளிப்பு!

திரு. முகுந்தன் அவர்களின் அணியினரான, செல்வன்: சிவபாலன், செல்வன்: வசந்தன் ஆகிய இரு போராளிகளும், மூலனூர் வந்து தமிழீழ மக்களின் இன்னல்களைப் பொது மக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் எடுத்துக் கூறினர். அதன் பயனாய், மூலனூர் அரசு மேல்நிலைப் பள்ளி, ஆசிரியைகள், ஆசிரியர்கள் தாராள மனத்துடன் உரு. 201, உரு 51 ஆக வழங்கி, மொத்தம் உரு. 1138-உம் மற்றும் மின் வாரியம், ஊராட்சி ஒன்றியம், கனரா வைப்பகம், நடுவண் கூட்டுறவு வைப்பகம், அஞ்சல் நிலையம், கரூர் வைசிய வைப்பகம், சர்வோதய சங்கம் ஆகிய அலுவலகங்களின் ஊழியர்கள் மனமுவந்து உரு.380 வழங்கினர்கள்.

ஒரு தனி அமைப்பான சர்வோதய சங்க ஊழியர்கள உரு. 200 வழங்கியது, நன்றியுடன் பாராட்டத்தக்க செயலாகும். அதற்கு உறுதுணையாக இருந்த அந் நிறுவனத்தின் செயலர் பாராட்டிற்குரியவராவர்.

இப்பொருள் தண்டலின் போது, தமிழீழப் போராட்டத்திற்கு அனைவரும் காட்டிய ஆர்வமும், உறுதியும், தமிழனிடம் இன உணர்வு அழிந்து விடவில்லை, காலம் வாய்க்கும்போது அது வீறிட்டெழும் என்பதை அறிந்தபோது மனம் நிறைவடைந்தது.

'மிகப்பெரிய பள்ளிகளில் கூட, ஆசிரியர்களால் இவ்வளவு தொகை வழங்கப்படவில்லை. உங்கள் பள்ளியில் வழங்கியுள்ளீர்கள். இதற்கு நாங்கள் செய்யும் கைமாறு, தமிழீழத்தில் பொதுவுடைமைக் குடியரசு மலர்ந்தது; அதன் உரிமைக்கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது, தமிழனுக்கென்று இவ்வுலகில் முழுஉரிமை பெற்ற அரசு அமைந்துவிட்டது என்ற இனிமை தரும் செய்தி, உங்கள் காதுகளை விரைவில் அடையச் செய்வதே'' என்று விடுதலைப் போராளிகள் வீர உணர்வுடன் கூறியது மறக்கக் கூடியதன்று.

செய்தி: புலவர். அறிவுடைநம்பி.

பெருஞ்சித்திரனாரின் வெற்றி என்பதை மறுக்க முடியாது!

இந்திரா சாம்பல் வழக்குப் பற்றி, "நேயர் விமர்சனம்" - இதழின் கருத்து!

(16—5—1985-இல் சென்னையிலிருந்து வெளிவந்த 'நேயர் விமர்சனம்' — என்னும் இதழில், ''இராசீவ் Vs பெருஞ்சித்திரனர்'' என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரை இது அப்படியே தூய தமிழ்ப்படுத்தி வெளியிடப் பெறுகிறது.)

புதுமையான வழக்குகளைச் சந்திப்பதென்பது, இப்பொழுதெல்லாம், நம் அறமன்றங்களுக்கு வாடிக்கையாகி விட்டது. அவற்றுள் சில சிந்தனையைத் தூண்டுபவையாகவும் உள்ளன. அப்படி அண்மையில் நடந்த ஒரு வழக்கு பொதுமக்களின் பார்வைக்குப் பரவலாகக் கொண்டுவரப்படவில்லையாதலால், அதை நமது கடமையாகக் கொண்டு, மக்களின் பார்வைக்குக் கொண்டு வருகிறோம்.

கடந்த 3-11-1984, சென்னை உயரற மன்றத்தில், குமுகாயச் சிந்தனையாளரும், தாளிகையாளருமான பெருஞ்சித்திரனர் அவர்களால், மறைந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களின் சாம்பல் (அஸ்தி)-அது தொடர்பாக நடந்த பழைய முறை நடவடிக்கைகள் (சம்பிரதாயங்கள்) குறித்து, திரு. இராசீவ் காந்தியின் தலைமையிலான நடுவண் அரசின் மேலும், மற்றும் மாநில அரசின் மேலும் ஒரு வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கின் சாரம், இந்திரா அம்மையாரின் சாம்பலை (அஸ்தியை) இந்தியாவெங்கும் மக்களின் வழிபாட்டுக்காகக் கொண்டு செல்லப்பட்ட நோக்கம், கொள்கை முறையிலான பார்வை, அதற்கு மக்களின் வரிப் பணத்தில் செய்யப்பட்ட செலவு, வருங்காலத்தில் இது ஒரு தவருன எடுத்துக் காட்டாகப் பின்பற்றுதலாகி விடலாம் என்னும் நயன்மையான அச்சம் ஆகியவை அடிப்படைச்சிக்கல்களாக அமைந்திருந்தன.

மூட நம்பிக்கையையோ அல்லது அதை ஊக்குவிக்கும் செயலோ, ஆய்வுக்கும், தடைக்கும் உள்ளாக்கப்பட வேண்டியவை என இந்திய அரசே சட்டமியற்றியுள்ள சூழ்நிலையில், அரசே இப்படி ஒரு செயலைச் செய்வதென்பது சரியானதா? எனக் கேட்டுள்ள கேள்வியில் நயன்மை (நியாயம்) இருப்பதாகவே தோன்றுகிறது. மேலும் இச் செயல் ஒரு குறிப்பிட்ட மதத்தைப் பின்பற்றி மதச்சார்பற்ற நமது அரசு செய்வதாகப் பிற மதத்தினர்க்கு எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தையும் எதிரொலிக்கிறது.

இந்தியா போன்ற ஏழையான நாடு, தம் குடிமக்களின் வரிப்பணத்தில் இப்படி ஒரு வீண் செலவான செயலைச் செய்யலாமா எனப் பொறுப்பான ஒரு குடிமகன் என்ற முறையில், பொருளியல் அடிப்படையில், இவர் எழுப்பியுள்ள கேள்வி உறுதியாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. மேலும், இது ஒரு தவருன எடுத்துக் காட்டாகி, வரும் காலங்களிலும் பின்பற்ற உந்துதலாகி விடக்கூடாது என்ற பொறுப்புணர்ச்சி மெச்சத் தகுந்த ஒன்று.

மேலும், ஒவ்வோர் இந்தியக் குடிமகனும் அறிவியல் பார்வை உள்ளவனுக இருத்தல் இன்றியமையாதது என அரசே வற்புறுத்துகின்ற இக் காலகட்டத்தில், அறிவியல் அறிவை மழுங்கடித்து, உணர்வு வயப்படச் செய்கின்ற இச் செயலை, மிகுந்த பொருட்செலவில் அதுவும் மக்கள் வரிப் பணத்திலிருந்து செய்யப்பட்டிருப்பது கேள்விக்குரிய ஒன்ருய் இவர் குறிப்பிட்டிருக்கிறுர். ஆட்சியாளரே இத்தகைய செயலை மேற்கொள்ளுதல் விரும்பத் தகுந்ததா என இவர் ஐயம் எழுப்பியிருக்கிறுர்.

இப்படி, கட்சிச் சார்பின்றிப் பொதுநல நோக்கோடு, அறிவியல் பார்வையின் அடிப்படையில், மக்கள் சார்பால் தொடரப்பட்ட இவ் வழக்கை, உசாவிய நடுவர் 'கனம்' திரு. எசு. நடராசன் அவர்கள் (மன்னிக்கவும் மறுபடி உயர்திரு. எசு. நடராசன் அவர்கள்) கோரிக்கையாளரின் குமுகாயப் பார்வை குறித்து, ஐயம் தெரிவித்திருப்பது பாராட்டத்தகுந்ததா என்பது சிந்தனைக்குரியது.

இது தொடர்பாய் நாம் திரு பெருஞ்சித்திரனர் அவர்களைச் சந்தித்து உரையாடியபோது, அவர் ''பெரியார், அண்ணு புதை மேடை (சமாதி)களின் முன் நிற்கும்போது, பகுத்தறிவு உணர்வு தோன்றுகிறது என்பதை ஒப்புக்கொண்டால், ரமணர் புதை மேடையின் முன் நிற்கும்போது 'பக்தி' உணர்வு தோன்றுகிறது என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்'' என்று கூறியது, அவருடைய நடுநிலைமை மிகக் கூரிய அறிவியல் பார்வை குமுகாயப் பொறுப்புணர்ச்சி ஆகியவற்றைத் தெளிவுபடுத்தின.

அறமன்றத்தின் தீர்ப்பு எப்படியாயினும், இந்த நொடி, இதை அறிபவர் சிந்தனையில எழும் நயன்மை(நியாய)உணர்வு பெருஞ்சித்திரனரின வெற்றி என்பதை மறுக்கமுடியாது, இதை எந்த அறமன்றத்தாலும் தடுத்துவிட முடியாது. Law follows the publc opinion. ஒரு தலைமுறையின் நெறி விலக்குகள் அடுத்த தலைமுறையின் வழிகாட்டிகள். வரலாறு புகட்டும் பாடம் இது. நெறி விலக்குகள் வழிகாட்டிகளா, மனக் கோணல்களா (வக்கிரிப்புகளா) என்பதற்குக் காலம் மட்டுமே விடை சொல்ல முடியும். கட்டாயம் தனி ஆள்கள் அல்லர்.

— செயாஃபட்.

நன்றி: 'நேயர் விமர்சனம', (10-5-85)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- ... யற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- ...களும பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம, அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்:58] பதிவு எண் TN/MS (C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம்மா.ஆறுமுகம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.